Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 01    மார்கழி    (08 - 12 - 1990)    சனிக்கிழமை    ஓசை 283

## காணாமற் போனோர் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக காணாமல் போன பொது மக்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காணாமல் போனவர்களின் உறவினர்கள் உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### லெப். கேர்ணல் போர்க் இறுதியாகக் கூறினார்

# "இத்துடன் இம் முகாமின் சரித்திரம் முடியும்"



தளபதி பால்ராஜ்

## வன்னி பிராந்திய தளபதி பால்ராஜ் பேட்டி

(நமது நிருபர்)

"நான் செல்கிறேன் இத்துடன் இம் முகாமின் சரித்திரம் முடியும், நாம் தமிழீழத்தை விரைவில் அடைவோம்" என்று கூறிவிட்டு கரும்புலி லெப். கேர்ணல் போர்க் வெடி மருந்து நிரப்பிய லொறியில் ஏறி முகாமிற்குள் சென்றார்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் வன்னிப் பிராந்தியத் தளபதி பால்ராஜ் புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் தமது பேட்டியில் மாங்குளம் முகாம்மீதான தாக்குதல் 22ஆம் திகதி இரவு ஆரம்பமானது முதல் நாளில் எத்தெந்த அரண்களைப்பிடிக்க வேண்டும் எனத் திட்டமிட்டோமோ அதே அரண்களைச் சரியாகப் பிடித்துக்கொண்டோம். நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பித்த தாக்குதலைத் தொடர்ந்து 2 மணியளவில் எமது தாக்குதல் இலக்குகளை கைப்பற்றிக் கொண்டோம். அடுத்த பக்கத்தை மூன்று மணிக்கு கைப்பற்றிவிட்டோம். அதாவது சரியாக மூன்று மணிக்கு எல்லாக் காவலரண்களும் எம்மிடம் வீழ்ச்சி அடைந்துவிட்டன. இதிலிருந்து தொடர்ச்சியாகத் தாக்குதல் நடந்தது. அடுத்த நாள் விடிந்ததும் மிகவும் கடுமையான விமானத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. கடைசிப் பலம் அதாவது இராணுவத்தின் முழுப்பலத்தையும் எமக்கு எதிராகப் பயன்படுத்தினர். நாங்கள் எத்தனை பேர் வீழ்ந்தாலும் இந்தமுகாமைத்தகர்ப்பது என்ற விடாப்பிடியான உறுதியுடன் போரிட்டோம். அதிகாலை ஆறு மணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம்

### கப்டன் கடாபி

(தெல்லிப்பளை)

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலில் கப்டன் கடாபி (நங்கவேல்பாபு முள்ளிலேன், அரியாலை) என்பவர் வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### நரயன்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்திய போது காயமடைந்த நரயன் (செல்லத்துரை துரைராசா கட்டுக்குளம், திரியாய்) யாழ். நகரில் நேற்று வீர மரணம் அடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### ஜெயபால்

(திருமலை)

திருமலை மாவட்ட விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றில் கடந்த 25.11 90 அன்று தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் லெப். ஜெயபால் (கணபதிமாடாசாமி பன்குளம்) வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## புலிகளின் தாக்குதலுக்கு ஊர்காவற்படை மூவர் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பஞ்சன்வெல கிராமத்திலிருந்த முஸ்லிம் ஊர்காவல் படையில் மூன்று பேரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றதாகவும், புலிகளின் இத்தாக்குதலில்மேலும் ஒரு ஊர்காவற்படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பரீட்சைக்குச்சென்ற சகோதரிகள் தோணி கவிழ்ந்து மரணம்!!

(மட்டக்களப்பு)

திருப்பழுகாமம் கிராமத்திலிருந்து கஞுதாவளைக்கு சென்றதோணிஒன்றுவாவியில் கவிழ்ந்ததில் மூவர் மரணமாகியுள்ளனர். இத்தோணியில் பயணம் செய்த சகோதரிகளான கிருஷ்ணபிள்ளை சத்திரா (25)கிருஷ்ணபிள்ளைஇந்திரா(23)ஆகியோர்க.பொ.த. பரீட்சைக்கு தோற்றவிருந்தனர். தோணி ஒட்டியான காளிகுட்டி என்பவரும் மரணமானார்.

## தச்சன்காட்டுச் சந்தியில் ஒரு இராணுவம் பலி

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் தச்சன்காட்டுச்சந்திப் பகுதியில் தமது காவலரண்களுக்கு முன்பாக முள்ளுக்கம்பியினால் வேலி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது வியாழக்கிழமை மாலை 5. 30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத்தாக்குதலில் இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் இருவர் காயமுற்றிருக்கலாம் எனத் தெரிகிறது. இதனால் இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டுவிட்டு ஓடிச் சென்றனர்.

### உதவி அரசாங்க அதிபர்களுக்கு

## அகதிமுகாம் பராமரிப்பு பற்றிய சுற்றுநிருபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை பராமரிப்பது தொடர்பாக சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயற் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இச்சுற்றுநிருபத்தின்படி இம் மாதம் முதல் அகதிமுகாம்களுக்கு வாராந்த உணவுப் பங்கீடு அம்முகாமிற்கு அண்மையில் உள்ள ப.நோ. கூட்டுறவுச்சங்கத்தின்மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இதற்குரிய உலர் உணவு அட்டைகளை விநியோகிக்க காலதாமதம் ஏற்படுமாயின் விசேட உத்தரவுப்பத்திரத்தை ப.நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மரம் வெட்டச் சென்ற இருவர் இராணுவத்தின் சூட்டுக்குப் பலி

(மட்டக்களப்பு)

வீடு கட்டுவதற்கு மரமும், ஓலையும்வெட்டச் சென்றஇருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 35ஆம் கிராமத்தில் வீடு கட்டுவதற்கு மரங்கள், தென்னை ஓலைகள் என்பவற்றைவெட்டுவதற்குச் சென்ற பொதுமக்கள் மீது இராணுவம் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர்.

இரு குழந்தைகளின் தந்தையும், 36 வயதான துறைநீலாவணை வாசியுமான தங்கராசா கிருஷ்ணபிள்ளை, 35 ஆம் கிராமத்தைச் சேர்ந்த 25

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்தரைக்கட்டை கிராமத்தில் தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

உன்னிச்சை இராணுவ முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் இந்த முகாமிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவிலுள்ள பத்தரைக்கட்டை கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கோயில் போரதீவைச் சேர்ந்த அருணாசலம் செல்வரட்ணம் என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

## நயினாமடுவில் குண்டு வீச்சு புலிகள் இராணுவம் மோதல்

(வவுனியா)

நயினாமடுக் கிராமத்தைச் சூழவும் சிறிலங்கா விமானப் படையின் வை 12, அவ்ரோ, பொம்மர் விமானங்களும், ஹெலிகொப்ரர்களும் தாக்குதலை மேற்கொண்டவேளையில் தரை மார்க்கமாக இராணுவத்தினர் நகர எத்தனித்தனர். இந்த இராணுவத்தினருடன் விடுதலைப் புலிகள் நேரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரிய வரவில்லை விமானத் தாக்குதலில் நயினாமடு பாடசாலை உட்பட கடைகள், வீடுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

## அரச ஊழியர் மரணச் செலவு பணமாக வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கான மரணச்சடங்குச் செலவுப்படி பணமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டை, மரணச்சான்றிதழ் ஆகியவற்றுடன் சமூகமளிக்கவும். இதுவரை விண்ணப்பித்தவர்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு செயலகத்தில் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

## இந்தியத் தூதுவர் ஜா டில்லிக்கு அழைக்கப்பட்டார்

(கொழும்பு)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜா இந்தியப் பிரதமரின் அழைப்பின் பேரில் நேற்று மாலை புதுடில்லிக்கு சென்றார். டில்லி சென்ற தூதுவர் ஜா இன்று பிரதமரைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச்சந்திப்பின்போது சிறிலங்காவின் இன்றைய நிலைவரம் பற்றியும், வெளிவிவகார அமைச்சர் சுகிஇலாவின் சிறிலங்காவிஜயம் பற்றியும் விவாதிக்கப்படஉள்ளதாகத் தெரிய வருகின்றது.

## ஒரு மாட்டிற்கு இருவர் உரிமை மாடு ஏலத்தில் விற்பனை

(புங்குடுதீவு)

இரு குடும்பத்தினர் ஒரு பசுமாட்டைச் சொந்தம் கொண்டாடி வழக்குத் தொடுத்த போதிலும் இறுதியாக அந்தப் பசுமாடு பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்ட சம்பவம் புங்குடுதீவு கிழக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே பகுதியில் வசிக்கும் இரண்டு குடும்பத்தினரும் மேற்படி பசுமாடு தங்களுடையது எனவும் அதனைப் பெறுவதற்காக புங்குடுதீவு 11 ஆம் 12 ஆம் வட்டார சிற்றூரவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256 A பருத்தித்துறை வீதி நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

### போட்டோஸ்ரட்

'ஸ்கைலைன்ஸ்'

தரமான போட்டோஸ்ரட் றோணியோ வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். 281 B, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். 'SKYILINES' 281, B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபால் கந்தோர் அருகாமை) (B/1662)

### அன்ரன் ஆர்ட்ஸ்
### ANTAN ARTS

தொழில் ஸ்தாபனங்களுக்கான விளம்பர பெயர்ப்பலகைகள் குறித்த தவணையில், சிறந்த முறையில் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க. அன்ரன் ஆர்ட்ஸ், C/O டில்கா வாச் வேக்ஸ், டில்கா மேல் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (B/1684

### தவறி விட்டது

சின்னராசா இருஷ்ணானந்த மூர்த்தி என்பவருடைய அடையாள அட்டை கொடிகாமம் சந்தையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் கோகிலா தேநீர் சாலையில் அல்லது கச்சய்பா லா வி கொடிகாமம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (R/910)

### விற்பனைக்கு

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை விரட்டுவதிலும் பயிர் நோய்களை அகற்றுவதிலும் வேப்பெண்ணெய் சிறந்த சாதனம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. சுத்தமான வேப்பெண்ணெய் போத்தல் ரூ80/- மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/1687)

### விற்பனைக்கு

பேப்பர் வெட்டும் 26 இஞ்சிக் கட்டர் ஒன்று விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி T சம்பந்தர் பொன்னாலை விதி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய் (R-912)


## சிற்றுண்டிச்சாலை இயங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் உள்ள சிற்றுண்டிச்சாலையை மிக விரைவில் செயற்படவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளில் மருத்துவமனை ஊழியர் நல விருத்திச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

கடந்தகாலங்களில்நோயாளிகள் சிற்றுண்டிச்சாலை இயங்காததினால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர். (க)

# குடிநீர் விநியோகத் திட்டத்தில் இரண்டு மட்டுமே இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பதின்மூன்று குடி நீர் விநியோகத்திட்டங்களில் இரண்டு திட்டங்கள் மட்டுமே தற்பொழுது செயற்பட்டு வருகின்றது.

மேற்படி பதின்மூன்று திட்டங்களிலும் வவுனியா, நயினாதீவு நீர் வழங்கல் திட்டங்கள் தவிர ஏனைய திட்டங்கள் யாவும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமடைந்தும் செயற்பட முடியாமலும் உள்ளது.

தற்போது செயற்படக்கூடிய நிலையில் உள்ள மேற்படி இரு திட்டங்களும் சிறிலங்கா இராணுவத்தினரின் தேவைகளையே தற்போது பூர்த்தி செய்வதாக உள்ளன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுல் படுத்தப்பட்டு வந்த முக்கிய குடிநீர் விநியோகத் திட்டம் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் உள்ளது.

இதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபைக்கு சுமார் நான்கு மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது இந்த மாவட்டத்தில் உள்ள ஏனைய சிறிய திட்டங்களும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

**யாழ்ப்பாணம்**

யாழ்.மாவட்டத்தில் உள்ள குடி நீர் விநியோகத் திட்டங்களில் நயினாதீவு திட்டம் மட்டும் சிறிலங்கா படையினரின் தேவைகளுக்காக செயற்பட்டு வருகிறது ஏனைய திட்டங்கள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன அல்லைப்பிட்டி, காங்கேசன் துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட இருந்த புதிய திட்டங்கள் அரசின் வடபகுதிக்கான அபிவிருத்தித் தடையால் கைவிடப்பட்டுள்ளன.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிநீர் விநியோகத்திட்டத்திற்கு தேவையான சகல உதவிகளையும் செய்வதாக ஜேர்மன் அரசாங்கம் முன்வந்தபோதிலும் அரசின் வடபகுதிக்கான அபிவிருத்தித் தடை மற்றும் இராணுவ நடவடிக்கை காரணமாகவும் இந்த உதவிகளை ஜேர்மன் அரசு நிறுத்திக்கொண்டதையடுத்து இம் மாவட்டத்தில் குடிநீர் விநியோகம் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டங்களில் ஒன்று மட்டுமே தற்போது செயற்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் சிறிலங்கா இராணுவத்தினரே தற்போது பயன் அடைந்து வருகிறார்கள்.

இம்மாவட்டத்திற்கான 37 கோடி ரூபா செலவிலான முக்கிய குடிநீர் விநியோகத் திட்டம் ஜேர்மன் அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அரசின் இராணுவ நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காணக்கூடிய பாரிய குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் கடந்த 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1989ஆம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது. இத் திட்டம் சுமார் எழுபது மில்லியன்ரூபா செலவில் நிறைவேற்றபட்டது. இதில் 30 மில்லியன் ரூபாவை நெதர்லாந்து அரசு வழங்கியது. மிகுதி 40 மில்லியன் பணமும் இலங்கை அரசினால் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும், தளபாடங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன. (க)

## கப்பலுக்கு பணம்வரவில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் நேற்று இலங்கை வங்கி தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இங்குஅனுப்பிவைக்கப்படும் பணம் தொடர்பாக உரையாடியுள்ளார். எனினும் இதுவரைகொழும்பில் இருந்து புறப்படவுள்ள கப்பலுக்கு பணம் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் பணத்தின் தொகை எவ்வளவு என்பது பற்றிக்கூறப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (க)

## 500 பெண்கள் மயக்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சுதந்திரவர்த்தக வலயத்திலுள் வேலை செய்யும் 500 இளம் பெண்கள் அங்குள்ள சாப்பாடுகளைசாப்பிட்டதால் மயக்கமுற்றுள்ளனர்.

இவர்கள் உடனடியாக நீர்கொழும்பு, றாகமை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.


## சில்வர் ரேடேர்ஸ்

இல.3B (11), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எங்களிடம் பிஸ்கட் வகைகள், ரொபி, இனிப்பு, தேயிலை, சொப்பிங் பாக், பவுடர் யாவையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (B/1680)

## விக்னா ரியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

**92** கலை, வர்த்தகம் புதிய பிரிவு ஆரம்பம் 8. 12. 90 காலை 8 மணி

**91** DAY CLASSES 10. 12. 90 காலை 8 மணி

**90, 91 DAY CLASSES SAT - SUN** நடைபெறுகின்றது.

மு. குறிப்பு:- கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(B/1683)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

**கலை, வர்த்தகம்**

DAY CLASS

ஆரம்பம் 10-12-90 திங்கள்

A/L 90 காலை 8-00 மணி

A/L 91 காலை 9-00 மணி

A/L 90, 91, 92 சனி, ஞாயிறு

(B/1676) வகுப்புகள் நடைபெறுகின்றன.


## அறிவித்தல்

### யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

எமது சங்கத் தீர்மானத்திற்கமைய ஒத்துழைத்த சகல அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நாம் அரசாங்க அதிபர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் ஆகியோருடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் கால அவகாசம் கேட்டுள்ளார்கள். ஆகவே சங்க அங்கத்தவர்களுக்கு அறியத்தருவது 07-12-90 தொடக்கம் பாண் உற்பத்தியை மேற்கொள்ளலாம். அடுத்த கூட்டம் பற்றிய திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும்.

— செயலாளர்

(R/911)

## யாழ்ப்பாணக் கல்லூரி புதிய மாணவர் அனுமதி 1991

பின்வரும் வகுப்புகளில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்

முதலாம் வருடம்: 01-02-85க்கும் 31-01-86க்கும் இடைபபட்ட காலத்திற் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

ஆறாம் வருடம்: 01-02-80க்கும் 31-01-81க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

12ஆம் வருடம்: க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிறந்த தகைமைகள் (விஞ்ஞானம், கணிதம் வர்த்தகம்) பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆற்றல் மிகுந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு: 20-12-90

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்திற் பெற்று ரூபா 50/- ற்கான பற்றுச்சீட்டுடன் சமர்ப்பிக்கவும்

— அதிபர்

(B/1682)


## COMPUTER PROGRAMMING COURSES

| COURSE | Date of Commencement |
| --- | --- |
| BASIC | 12. 12. 1990 |
| d BASE III + | 14. 12. 1990 |
| LOTUS 1, 2, 3 | 12. 12. 1990 |
| WORD STAR | 17. 12. 1990 |

Lectures by the Members of the Institute of Data Processing Management (London)

*SCHOOL OF BUSINESS ADMINISTRATION*

(LEADERS IN COMPUTER EDUCATION)

16, 3rd CROSS STREET, JAFFNA.

(B. 1681)

## சிந்தனைக்கு

சுகபோகம் மனித இனத்தையே அழிக்கின்றது; ஒரே வேளையில், உடலையும், மனத்தையும் மாசுபடுத்தி விடுகிறது.

— ஜான்க்ரெளன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## அனைவருக்குமாக ஒவ்வொருவரும் ...

இன்றைய யுத்தச் சூழலினால் பெருமளவில் பொதுச் சொத்துக்களும், தனியார் சொத்துக்களும் அழிவுறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை குண்டு வீச்சுக்களினாலும், இராணுவ நடவடிக்கையினாலும் அழிக்கப்படுபவையாகும். அதேவேளை போராட்டத்தின் தேவை கருதியும், மக்களின் நன்மை கருதியும் பொதுச் சொத்துக்கள் சில, போராளிகளால் வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படுவதும் உண்டு. இதனால் சில தவிர்க்கப்பட முடியாத சேதங்களும் ஏற்படுவதுண்டு.

ஆனால், சில பொதுச் சொத்துக்கள் போராட்டச் சூழலைக் காரணமாக வைத்து பொதுமக்கள் சிலரால் அழிக்கப்பட்டு வருவது கவலைக்குரிய ஒன்றாகும். அதாவது பொதுச் சொத்தை சொந்தத் தேவைக்காக கைப்பற்றுதல், பயன்படுத்துதல் என்பனவாகும்.

இன்று தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சகல பொதுச் சொத்துக்களும் தமிழ் மக்களுடையதே. இலங்கையை ஆண்ட காலனியாதிக்கவாதிகளோ அல்லது தமிழர் பிரதேசத்தில் தனது நிர்வாகத்தை நடத்திய சிறிலங்கா அரசாங்கமோ இந்தச் சொத்துக்களின் சொந்தக்காரர்கள் அல்ல. எமது செல்வத்தில் இருந்து தமது சுரண்டலுக்காகவும், நிர்வாக வசதிக்காகவும் இவை நிர்மாணிக்கப்பட்டவை. ஆகவே 'அரச சொத்துக்கள்' எனக் குறிப்பிடப் படுபவையும், அபிவிருத்தித் திட்டங்கள் என ஆங்காங்கு காணப்படும் சிறு சொத்துக்களும் தமிழருடையவை. ஆகையால் அவற்றைப்பேணுதல் தமிழருடையகடமையாகும்.

காலனியாதிக்கவாதிகளும் சிறிலங்கா அரசாங்கமும் எம்மை அடிமைப்படுத்தியாண்டார்கள் என்பது உண்மை தான். அதேவேளை அவர்கள் எம்மை ஆள்வதற்காகவும், சுரண்டுவதற்காகவும் மேற்கொண்ட நடவடிக்கையின்போது எதிர்காலத்தில் எமக்கு நன்மை கொடுக்கக்கூடிய (தற்காலிகமாகவேனும்) சிலவும் உள்ளன. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து காலனியாதிக்கவாதிகள் வெளியேறியபோது அவர்களால் அமைக்கப்பட்ட, நிர்வகிக்கப்பட்ட பல அம்சங்கள் இந்த நாடுகளின் உடனடி இயக்கத்திற்கு அத்தியாவசியமாக இருந்தன. எடுத்துக்காட்டாக காலனியாதிக்கவாதிகளின் பொருளாதார ஒழுங்கே இந்த நாடுகளில் பேணப்பட்டன. ஆனால் காலப்போக்கில் அவற்றை மாற்றத்திற்கு உள்ளாக்காமல் விட்டமை இந்த மூன்றாம் உலக நாடுகளின் தவறுகள் ஆகும்.

இதேபோன்று எமதுமண்ணும் விடுதலை அடையும்போது அதன் நிர்வாகத்திற்கும், வளர்ச்சிக்கும் உடனடித் தேவையாக இன்றுள்ள சில பொதுச் சொத்துக்கள் தேவைப்படலாம். இந்த நிலையில் பொதுச்சொத்துக்களை எந்தவித காரணமும், நோக்கமும் இன்றி மக்கள் அழித்தலோ, அல்லது அதற்குத் தடங்கல் ஏற்படுத்துவதோ ஏற்கக்கூடிய ஒன்றல்ல.

இன்று குண்டுவீச்சிற்கு இலக்காகும் 'அரச நிறுவனங்கள்' பொதுச் சொத்துக்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலுள்ள பொருள்களை எடுத்துச்செல்லுதல், களவாடுதல் என்பன பெருமளவில் இடம்பெற்று வருகின்றன. எடுத்துக்காட்டாக பாடசாலைகளில் அகதிகளாக தஞ்சமடைந்து உள்ளவர்கள் பாடசாலைத் தளபாடங்களை தமது சொந்தத்தேவைக்கு விறகாகப் பயன்படுத்தல், அழித்தல் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இது சிறிலங்கா அரசாங்கத்தின் சொத்துதானே என்ற எண்ணமே இதற்கான பிரதான காரணமாகும். ஆனால் உண்மையில் அது சிறிலங்கா அரச சொத்து அல்ல. தமிழ் மக்களின் சொத்து. இவை தமிழரின் எதிர்கால அபிவிருத்திக்கு அத்தியாவசியமானவையாக அமையலாம். ஆகையினால் இவை பாதுகாக்கப்பட வேண்டும்.

இன்றைய நெருக்கடி நிலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை இழந்துள்ளமையால் அவர்கள் பொதுக்கட்டடங்களைப் பாவித்தல் தவிர்க்கமுடியாதது. ஆனால், தேவைக்கதிகமான அளவில் பொதுக் கட்டடங்களைப் பாவித்தல், அவற்றின் இயக்கத்திற்குத் தடையாக இருத்தல் என்பன எமது சமுதாய வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும். அதாவது சில பொதுக் கட்டடங்களை ஒரு சிலர் தனித்துவமாகப் பயன்படுத்துவது ஏற்புடையதல்ல. அது சமுதாய வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கக்கூடியது.

அதாவது, போராட்டச்சூழலில் மக்களுக்கு நெருக்கடிகள் உள்ளன. தேவைகள் உள்ளன என்பது உண்மைதான். ஆனால் பொதுச்சொத்துத்தானே என்ற எண்ணத்துடன் அதனை அழிக்க முற்படுதல் கூடாது. அது எமது சமூகத்தின் சொத்து. எமது எதிர்காலச் சந்ததியின் வளர்ச்சிக்குத் தேவையானது. ஆகையால் அதனை உணர்ந்து மக்கள் செயற்படுவது விரும்பத்தக்கதாகும்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...



மாத்தயாவின் அருகில் யானையைக் கண்டதும் அவரது மெய்ப்பாதுகாவலர் குட்டியின் எம்-16 முழங்கியது. அவ்வளவுதான் வெடியையும் வாங்கிக் கொண்டு பிளிறியபடியே யானைஒரேஓட்டமாக ஓடியது. நிச்சயமாக அது உயிர் பிழைத்திருக்காது. வெடிவாங்காமலிருந்தால் மாத்தயாவோ அல்லது யாரோ உயிர்பிழைத்திருக்க மாட்டார்கள். தனியன் யானைக்குரிய குணத்தை அது காட்டியிருக்கும்.

இரவு இரண்டு மணியளவில் ஒரு முகாமைச் சென்றடைந்தோம். அடுத்தநாள் காலை 14ஆம் திகதி வெருகல் வாகரைகதிரவெளிப்பகுதியை சுற்றிப்பார்க்க வேண்டும் என்றேன். சரிஎன்றார் மாத்தயா. மாலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின்மகளிர் படைப் பிரிவின் பயிற்சி முகாமுக்கு தான் செல்வதாகவும் எம்மை நேரே அங்கே வருமாறும் கூறினார்,

குடிசையினுள் பார்வையைச் செலுத்தினேன். பின்னிமுடிக்கப் படாத நிலையிலிருந்த ஒரு பாயும்பாய் இழைப்பதற்கு பயன்படும் காயவைத்த புற்களும் அங்கே காணப்பட்டன. சொந்தஇடம் எதுஎன்றேன் 'பூநகர்' என்றார் மேலும் பலரைக் கண்டு விசாரித்து விட்டு கதிரவெளிப்பக்கம் சென்றேன்.

கதிரவெளி கடைத்தெருவில் வியாபாரம் செய்துகொண்டிருக்கும் ஒருவரைச் சந்தித்தேன். இந்தச் சாமான்களை எங்கே வாங்குகின்றீர்கள்? என்று கேட்டேன். நான்சாமான்வாங்கப் போவதில்லை வாழைச்சேனையில் இருந்து சாமான் வாங்கி வருபவர்களிடம் தான் வாங்குவதுண்டு என்றார். ஏன் நீங்கள் போவதில்லை என்று கேட்டேன். இதுவரை தனக்குத் தெரிந்த ஆறு மூதூர் வாசிகள் இவ்வாறு சாமான் வாங்கப் போய்த் திரும்பி வரவில்லை எனக் கூறி அவர்களின் பெயரையும் தெரிவித்தார்.

யாவும், கருணாவும் உரையாற்றினர். இதுவரை நாளும் தங்களை களத்தில் இறங்க அனுமதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை வைத்த அந்த மகளிர் படைப்பிரிவினருக்கு விரைவில் அந்தச் சந்தர்ப்பம் உங்களுக்கு வழங்கப்படும் எனக்கூறி கருணா சமாளித்தார். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ரஞ்சன் விஜே

## 34

ரட்னா கூறும் மழலைப் பட்டாளமாக இருந்தாலும் சரி, மகளிர் பட்டாளமாக இருந்தாலும் சரி அனைவரும் தங்களைக் களத்தில் இறங்க அனுமதிக்க வேண்டும் என்றே முரண்டு பிடிப்பார்கள்.

மகளிர் படைப்பிரிவினர் இவ்வளவு நாளும் ஏன் தங்களை களத்தில் இறங்க அனுமதிக்கவில்லை என்று போர்க்கொடி உயர்த்தியபோது ஏனோ எனக்கு ஈ.பி.ஆர்.



எமக்கு எப்போதுதான் ஒழுங்கான சாப்பாடு கிடைக்கும்? பாட்டியிடம் பார்வையாலே கேள்வி கேட்கும் பேரர்கள்.

நானும்மற்றும்சிலரும் வெருகல் பகுதிக்குச் சென்றோம். ஆலய மடத்திலும், ஆற்றங்கரைகளிலும் இருக்கும் அகதிகளைச் சந்தித்தோம். ஆற்றங்கரையோரமாக இருந்த குடிசையொன்றுக்குச் சென்றேன். அங்கே ஒரு முதியவரும் பாட்டியும் இரு குழந்தைகளும் இருந்தனர். குழந்தைகள்கஞ்சி குடித்துக் கொண்டிருந்தார்கள். நேரத்தைக் கவனித்தேன். பகல் 12.30 மணி. முதியவரை அணுகி ''என்ன ஐயா இப்பதானா காலைச் சாப்பாடு சாப்பிடுறீங்கள்'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''நாங்கள் காலையில் சாப்பிடுவதில்லை. மத்தியானம் தான் கஞ்சிகுடிப்போம் மாலையில் தான் சோறுசமைப்பதுண்டு'' என்றார். அவரது முகத்தில் இயலாமையுடன் கூடிய சிரிப்புத்தெரிந்தது ஏன் தான் கேட்டோம் என்று ஆகி விட்டது எனக்கு. சோறு சமைத்தால் கறிக்கு என்ன செய்வீர்கள்? என்று கேட்டேன். ஆற்றங்கரைகளில் கிடைக்கும் கீரைகளைப் பிடுங்கிச் சமைப்போம் என்றார். ''அரச உதவி...'' என்றேன். ''இதுவரை இல்லை'' என்றார். ''அப்ப சாப்பாட்டுக்கு என்னவருமானம்?'' என்றுகேட்டேன். ''பாய் இழைத்து விற்போம்'' என்

அப்படியே அந்தப் பகுதி முழுவதையும் சுற்றிப் பார்த்தோம். பின்னர் அங்கிருந்து புறப்பட்டோம். இடையில் ஒரு முகாமுக்குச் சென்றோம். அங்குள்ள முகாம் பொறுப்பாளர் சங்கர் என்பவரைச் சந்தித்தோம். பன்னிரண்டாம் திகதியன்று வாழைச்சேனைக்கு பொருள்கள் வாங்கப் போன மூன்று வியாபாரிகளில் இருவரை முஸ்லிம் ஊர்காவற்படையினர் பிடித்துக்கொன்றதாகவும் ஒருவர் ஆடைகளை இழந்த நிலையில் தப்பி வந்ததாகவும் தெரிவித்தார்.

அங்கிருந்து புறப்பட்டு மகளிர் படைப்பிரிவின் முகாமுக்குச் சென்றோம். விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவின் சிரேஷ்ட போராளிகளில் ஒருவரான ஜெயாவே இந்த முகாமுக்கும், மட்டக்களப்பில் உள்ள பெண் போராளிகளுக்குப் பொறுப்பாக விளங்குகிறார். இவரிடம் மட்டக்களப்பு நிலைமைகளைக் கேட்டோம். என்னென்ன மாதிரியான திட்டங்களை தாங்கள் நடைமுறைப் படுத்துகின்றனர் என்பதை விளக்கினார். அப்போது மாத்தயாவும் கருணாவும் வந்தனர் அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர். இறுதியில் மாத்த

எல் எவ். பற்றிய நினைவு வந்தது. 1983ஆம் ஆண்டு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தை தாக்க அப்போதைய ஈ.பி.ஆர்.எல். எவ்வின் இராணுவப் பிரிவான பி.எல்.ஏயின் கொமாண்டர் குன்சி தலைமையில் ஒரு குழு புறப்பட்டது. பொலிஸ் நிலையத்தை அண்மித்ததும் ஒவ்வொருவரும் நீர் முன்னுக்குப் போம் தோழர். இல்லை நீர் முன்னுக்குப் போம் தோழர் என்று பிரச்சினைப்பட்டார்கள். கடைசியில் ஒருவரும் போகத் துணியவில்லை. அவர்களின் அதிர்ஷ்டம் அந்த வேளை ஒரு நாய் குரைத்தது. எனவே குன்சி நாய் குரைத்துவிட்டது. ஆகவே அவர்கள் 'அலேட்' (உஷார் நிலை) ஆகிவிடுவார்கள் திரும்பிப் போவோம் என்று கூறி அனைவரையும் திருப்பிக் கொண்டு வந்துவிட்டார்.

அங்கே நீ முன்னுக்குப் போ என்கிறார்கள், இங்கே என்னை முன்னுக்கு விடு என்கிறார்கள். அதுதான் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம்.

அன்று இரவே திருமலை மாவட்டத்தினுள் சென்றோம் எம்மை வரவேற்க பதுமனும் மற்றவர்களும் வந்திருந்தனர் எம்மை பதுமனிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பினார் கருணா. (தொடரும்)

### ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் குழுவினர்

# ஒழுங்காக நடக்காவிட்டால் தூக்கி எறிந்துவிடுவோம் -ரஞ்சன்

(கொழும்பு)

ரெலோ, புளொட் மற்றும் ஈ.பி.டி.பி குழுவினைச் சேர்ந்தவர்கள் ஒழுங்காக நடந்தால் தமது இராணுவத்துடன் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் இல்லையேல் தூக்கி எறியப்படுவர் என சிறிலங்காவின் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியில் இவ்வாறு அவர் தெரிவித்தார். மேற்கூறிய குழுக்கள் இப்பொழுது விடுதலைப்புலிகளை தேடிக் கண்டுபிடிப்பதற்கும், தமிழ் இராமங்களை பாதுகாப்பதற்கும் தமக்கு உதவி புரிகின்றனர் என்றும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதத்தை களைந்துவிட்டு வந்தால் நிபந்தனையின்றி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் கூறினார்.

தமிழகத்தில் சந்திரசேகர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

### இலங்கைஇராணுவத்தில் இஸ்ரேலியர்

## சபாநாயகர் கூற்றிற்கு பாதுகாப்பு அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினருடன் இஸ்ரேலியர்களும் இருக்கின்றார்கள் என்று வந்த செய்தியை சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா மறுத்துள்ளார்.

சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். முகமட் சிறிலங்காவில் பத்து இஸ்ரேலிய இராணுவ நிபுணர்கள் இருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டதையே அமைச்சர் ரஞ்சன் மறுத்துள்ளார். அதே வேளை சபாநாயகர் இது பற்றிப் பேசியிருக்கக்கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கடற்றொழிலாளர்கள் பாதிப்புகளை அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11 6 90 க்குப் பின்னர் யாழ். மாவட்ட, வெளி மாவட்டக் கடற்றொழிலாளர்களை இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய விபரத்தை அவர்கள் அங்கம்வகிக்கும் நிறுவனங்கள் ஊடாகச் சமர்ப்பிக்கும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கடற்றொழில்பகுதி யாழ் மாவட்ட மாதிரி நிர்வாகச் செயலகம் கேட்டுள்ளது.

இறப்பு, ஊனமுற்றோர், தொழிலிழந்தோர், தொழில் பாதிப்புற்றோர், மற்றும் விபரங்களைச் சகலவித புள்ளி விபரங்களுடன் தங்களுக்கருகில் உள்ள பிரதேசக் காரியாலயத்தின் ஊடாக மேற்குறிப்பிட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

### இராணுவத்தால் கைது செய்யப்பட்ட

## மாணவி பற்றி தகவலறிய துணைவேந்தர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவியைப் பற்றிய தகவல் அறியவும் அவரை விடுதலை செய்வதற்காகவும் பல்கலைக்கழக துணைவேந்தர் முயற்சி எடுத்து வருகிறார். கடந்த ஐப்பசி மாதம் காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட விஞ்ஞான பீட மாணவியான செல்வி சுப்பிரமணியம் சத்தியாவை விடுவிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மனிய ஆணைக்குழுவுடன் துணைவேந்தர் தொடர்பு கொண்டுள்ளார்.

### யாழ்-மட்டு.பல்கலைக்கழகங்களில்இருந்து

## 445 மாணவர் தெற்கிற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் ... ரம் வருமாறு விவசாய விஞ்ஞானம் 54 உயிரியல்

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் சில கிளைகளில் கடமை புரிவதற்குத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட மன்னார் மக்கள் வங்கிக் கிளையைச் சார்ந்த ஊழியர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பிரதேச தலைமை அலுவலகத்தில் சமுகமளிக்கும்படி பிரதேச முகாமையாளர் கேட்டுக்கொள்கிறார்.

### ஆக்கங்கள் தேவை

'புலிகளின்குரல்' வானொலி ஒலிபரப்புக்குதேவையான ஆக்கங்கள், படைபுகள் ஆகியன நேயர்களிடமிருந்தும், கலைஞர்களிடமிருந்தும் ஆக்க இலக்கியக் காரர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுவதாக 'புலிகளின் குரல்' அறிவித்துள்ளது.

### நிர்வாகிகளுக்கான கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது என மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தாய்ச்சங்க நிர்வாகிகளையும், சகல மாவட்ட நிர்வாகிகளையும், இளைச்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களையும் சமூகம் தரும்படி மகாசிவம் கேட்டுள்ளார்




## விஸ்வ ஹிந்து தொண்டர்களால் முஸ்லிம் தீயிடப்பட்டார்

(அயோத்தி)

இந்தியாவில் சர்ச்சைக்குரிய ராமஜென்ம பூமிப்பகுதியில் இந்துமத அடிப்படைவாதிகளான விஸ்வ ஹிந்து பரிஷத் தொண்டர்கள் தங்கியிருந்த பகுதிக்குள் இந்துமதசாமியார் போல் வேடமணிந்த முஸ்லிம் ஒருவர் பிரவேசித்துக் கலவரம் செய்ய முற்பட்டவேளையில் அவர் விஸ்வ ஹிந்து பரிஷத் தொண்டர்களால் தீமூட்டிக் கொளுத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

இதேவேளை ராமர் ஆலயத்தைக் கட்டும் முயற்சியில் ஈடுபடும் தொண்டர்கள் தொடர்ந்தும் ஆயிரக் கணக்கில் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

## நிலுவைகளைச் செலுத்த ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை வரியிறுப்பாளர்கள் தங்களது நிலுவைப் பணத்தை செலுத்தும்படி மாநகர ஆணையாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பாரியளவில் பாதிப்புற்ற நிலையிலும் வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய குறைந்தபட்ச அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண்டிய கட்டுப்பாடு மாநகர சபைக்கு உண்டு எனவே வரிப்பணத்தைப் பகுதி பகுதியாகவாவது செலுத்தும்படி மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

## "புலிகளின்குரல்"

"புலிகளின் குரல்" வானொலி ஒலிபரப்புச்சேவையினை கிளிநொச்சிவரை தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது என அங்கிருந்து எமது நிருபர் தெரிவிக்கின்றார். யாழ். குடாநாடு முழுவதும் 98 MHZ பண்பலை வரிசையில் இரவு 8 மணி முதல் 9 மணிவரை புலிகளின் குரல் தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருப்பது வாசகர்கள் அறிந்ததே.

### இத்துடன்

யில் இருந்து தொடர்ந்து இடைவிடாமல் நடந்த சண்டையின் பயனாக பிற்பகல் மூன்றுமணியளவில் முகாமை விட்டு ஓடத்தொடங்கியது இராணுவம். இராணுவத்தை நாம் துரத்தத் தொடங்கினோம். கலைத்துக் கலைத்து துரத்தினோம். இராணுவத்தின் சடலங்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

நாம் எதிர்பார்க்காத பல நிலைகளையும் கூடப் பகல் நேரச் சண்டையின் போது கைப்பற்றிக்கொண்டோம்.

பொருள் அடங்கிய லொறி புகுந்தது. லொறி வெடித்தவுடன் எமது தாக்குதல் அணி முகாமினுள் பிரவேசித்தது. எமது தாக்குதல் அணியிடம் முழு இராணுவ முகாமும் வீழ்ச்சி கண்டது.

அடுத்த பக்கத்தில் இருந்து சிறிலங்கா இராணுவ அணி ஒன்று தப்பி கனகராயன் குளப் பக்கமாக ஓடத் தொடங்கியது. அவர்களைத் தாக்க எமது வேறொருஅணி தயாராக இருந்தது. யாழ். வவுனியா வீதியான கண்டி றோட்டின் மேலாகச் சென்று கனகராயன் குளத்துடன் ...

## பாதிப்புகளை அறியத்தரவும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 11 6 90 க்குப் பின்னர் யாழ். மாவட்ட, வெளி மாவட்டக் கடற்றொழிலாளர்களை இராணுவ நடவடிக்கையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிய விபரத்தை அவர்கள் அங்கம்வகிக்கும் நிறுவனங்கள் ஊடாகச் சமர்ப்பிக்கும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கடற்றொழில்பகுதி யாழ் மாவட்ட மாதிரி நிர்வாகச் செயலகம் கேட்டுள்ளது.

இறப்பு, ஊனமுற்றோர், தொழிலிழந்தோர், தொழில் பாதிப்புற்றோர், மற்றும் விபரங்களைச் சகலவித புள்ளி விபரங்களுடன் தங்களுக்கருகில் உள்ள பிரதேசக் காரியாலயத்தின் ஊடாக மேற்குறிப்பிட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

### இராணுவத்தால் கைது செய்யப்பட்ட

## மாணவி பற்றி தகவலறிய துணைவேந்தர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவியைப் பற்றிய தகவல் அறியவும் அவரை விடுதலை செய்வதற்காகவும் பல்கலைக்கழக துணைவேந்தர் முயற்சி எடுத்து வருகிறார். கடந்த ஐப்பசி மாதம் காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட விஞ்ஞான பீட மாணவியான செல்வி சுப்பிரமணியம் சத்தியாவை விடுவிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மனிய ஆணைக்குழுவுடன் துணைவேந்தர் தொடர்பு கொண்டுள்ளார்.

### யாழ்-மட்டு.பல்கலைக்கழகங்களில்இருந்து

## 445 மாணவர் தெற்கிற்கு இடமாற்றம் கோரி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்தும் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திலிருந்தும் தென்பகுதிபல்கலைக்கழகங்ளுக்கு445 மாணவர்கள் கடந்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன்பு இடமாற்றம் கோரி விண்ணப்பங்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்த மாணவர்களின் தொகை விபரம் வருமாறு விவசாய விஞ்ஞானம் 54 உயிரியல் விஞ்ஞானம் 95,பௌதீக விஞ்ஞானம் 105 முகாமைத்துவம 86 வர்த்தகம் 105 ஆகும் இதேவேளை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து தென்பகுதி பல்கலைக்கழகங்களுக்கு விண்னப்பித்த மருத்துவ பீட மாணவர்கள் 370 பேராகும் எனவும் தெரிய வருகிறது.

### மானிப்பாய் வைத்தியசாலை முன்பாக

## மானிப்பாய் பிரதான வீதி போக்குவரத்திற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வைத்தியசாலையின் முன் உள்ள பிரதான வீதி மீண்டும் போக்கு வரத்துக்குத் தடைசெய்யப் பட்டுள்ளது. இதனால் மழை வெள்ளம் தேங்கி நிற்கும் வைத்திய சாலையின் பின்புற வீதியை மக்கள் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. இருபுறமும் மதில்களால் கட்டப்பட்டு மிக ஒடுங்கிய இந்த பின்புற வீதி பெரும் வாகன நெரிசலுக்கு உள்ளாகியுள்ளது.

நேற்று சங்குவேலிப் பகுதியைச் சேர்ந்த மாம்பழ வியாபாரி நாகராசா என்பவர் இந்த பின்புறவீதியால் சென்று கொண்டிருந்த போது வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு சைக்கிளுடன் தூக்கி வீசப்பட்டார். இதனால் அவர் காலில் பலத்த காயத்திற்கும் உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

---

மரம் வெட்டச்

வயதான வைரமுத்து சிவலிங்கம் ஆகிய இருவருமே இவ்வாறு இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களாவர்.

---

காணாமற்

விண்ணப்பப் படிவங்களைப் பெற்று காணாமல் போனவர் பற்றிய சகல விபரங்களையும் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (க)

---

களில் கடமை புரிவதற்குத் தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட முன்னாள் மக்கள் வங்கிக் கிளையைச் சார்ந்த ஊழியர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பிரதேச தலைமை அலுவலகத்தில் சமுகமளிக்கும்படி பிரதேச முகாமையாளர் கேட்டுக் கொள்கிறார்.

### ஆக்கங்கள் தேவை

'புலிகளின்குரல்' வானொலி ஒலிபரப்புக்குதேவையான ஆக்கங்கள், படைபுகள் ஆகியன நேயர்களிடமிருந்தும், கலைஞர்களிடமிருந்தும் ஆக்க இலக்கியக் காரர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுவதாக 'புலிகளின் குரல்' அறிவித்துள்ளது.

### நிர்வாகிகளுக்கான கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கு சங்கத்தின் புதிய தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது என மேற்படி சங்கத்தின் பொதுச்செயலாளர் த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தாய்ச்சங்க நிர்வாகிகளையும், சகல மாவட்ட நிர்வாகிகளையும், இளைச்சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர்களையும் சமூகம் தரும்படி மகாசிவம் கேட்டுள்ளார்

---

அகதிமுகாம்

உடனடியாகஉணவு விநியோகத்தை ஆரம்பிப்பதற்குஒழுங்குகள் செய்யும்படியும் கோரியுள்ளார் அகதிமுகாம்களின் விபரமும் அவற்றிற்கு வாராந்தம் தேவைப்படும் உணவுப் பொருள்களின் அளவு போன்ற விபரங்களையும்அனுப்பிவைக்கும் படியும்அகதிமுகாம்களில் உள்ளோரின் எண்ணிக்கையை தனது முன் அனுமதி இன்றி அதிகரிக்க வேண்டாம் எனவும் அச்சுற்று நிருபத்தில் கேட்டுள்ளார். (க)

---

ஒரு மாட்டிற்கு

யில வழக்குத் தொடுத்ததாகவும், பிரஸ்தாப சிற்றூர்அவையினர் இரு பகுதியினரதும் வாதப் பிரதி வாதங்களைக் கேட்ட போதிலும் பல்வேறு சிக்கல் நிறைந்த இந்த வழக்கில் தீர்ப்புக் கூறுவதற்குத் திண்டாடிக் கொண்டிருந்த சமயம் இரு பகுதியினருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக இருபகுதியினருமே தங்களுக்கு அந்த மாடு தேவையில்லை என்று கூறியதாகவும் அதனை அடுத்தே அந்த மாடு மேற்படி சிற்றூரவையினரால் பகிரங்க ஏலத்தில்விற்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு ஏலவிற்பனை மூலம் பெறப்பட்ட பணம் மண்மீட்பு நிதிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (22)

---

## நிலுவைகளைச் செலுத்த ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை வரியிறுப்பாளர்கள் தங்களது நிலுவைப் பணத்தை செலுத்தும்படி மாநகர ஆணையாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பாரியளவில் பாதிப்புற்ற நிலையிலும் வரியிறுப்பாளர்களுக்கு வழங்கக்கூடிய குறைந்த பட்ச அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண்டிய கட்டுப்பாடு மாநகர சபைக்கு உண்டு எனவே வரிப் பணத்தைப் பகுதி பகுதியாகவாவது செலுத்தும்படி மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

### "புலிகளின்குரல்"

"புலிகளின் குரல்" வானொலி ஒலிபரப்புச் சேவையினை கிளிநொச்சிவரை தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது என அங்கிருந்து எமது நிருபர் தெரிவிக்கின்றார். யாழ். குடாநாடு முழுவதும் 98 MHZ பண்பலை வரிசையில் இரவு 8 மணி முதல் 9 மணிவரை புலிகளின் குரல் தெளிவாகக் கேட்கக் கூடியதாக இருப்பது வாசகர்கள் அறிந்ததே.

---

இத்துடன்

யில் இருந்து தொடர்ந்து இடைவிடாமல் நடந்த சண்டையின் பயனாக பிற்பகல் மூன்றுமணியளவில் முகாமை விட்டு ஓடத்தொடங்கியது இராணுவம். இராணுவத்தை நாம் துரத்தத் தொடங்கினோம். கலைத்துக் கலைத்து துரத்தினோம். இராணுவத்தின் சடலங்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றினோம்.

நாம் எதிர்பார்க்காத பல நிலைகளையும் கூடப் பகல் நேரச் சண்டையின் போது கைப்பற்றிக்கொண்டோம். எமது திட்டத்தின்படி அநேகமாக எல்லா இடங்களையும் நாம் கைப்பற்றினோம்

ஆனால் பகலில்பிடித்திருக்க வேண்டிய ஹெலி பாட்டைப் பிடிப்பதற்குக் கடும் சண்டையிடவேண்டியிருந்தது. அதிலும் வெற்றியைக்கண்ட நாம் உள்ளே அமைக்கப்பட்டிருந்த நிலைகளையும் கைப்பற்றி அதிலிருந்து தொடர்ந்து தாக்கினோம்.

ஒரு அணி தொடர்ந்து முகாமை நோக்கித் தாக்கிக் கொண்டிருக்க, இன்னொரு அணி விமானத் தாக்குதலை எதிர்கொள்ளமற்றொருஅணி புதுப்புது நிலைகளை அமைக்கும் பணியை மேற்கொண்டது.

அடுத்த நாளிரவு ஒரு மணிக்கு கரும்புலி லெப். கேர்ணல் போர்க் வெடிமருந்துகளடங்கிய லொறியுடன் முகாமுக்குள் புகுந்தார். பதினொரு மணிக்கு என்னைச் சந்தித்த போர்க் கட்டிப் பிடித்து மகிழ்ச்சி ஆரவாரம் காட்டியதுடன் 'நான் செல்லுகிறேன் இத்துடன் இந்த முகாமின் சரித்திரம் முடியும் நாம் தமிழீழத்தை விரைவில் அடைவோம்' என்று கூறிச் சென்றார்.

சரியாக அதிகாலை 1 02 க்கு முகாமினுள் வெடி பொருள் அடங்கிய லொறி புகுந்தது. லொறி வெடித்தவுடன் எமது தாக்குதல் அணி முகாமினுள் பிரவேசித்தது. எமது தாக்குதல் அணியிடம் முழு இராணுவ முகாமும் வீழ்ச்சி கண்டது.

அடுத்த பக்கத்தில் இருந்து சிறிலங்கா இராணுவ அணி ஒன்று தப்பி கனகராயன் குளப் பக்கமாக ஓடத் தொடங்கியது. அவர்களைத் தாக்க எமது வேறொருஅணி தயாராக இருந்தது. யாழ். வவுனியா வீதியான கண்டி றோட்டின் மேலாகச் சென்று கனகராயன் குளத்துடன் சேர்த்து சுற்றி வளைக்க இன்னொரு அணி காத்திருந்தது. இந்த இராணுவத் தாக்குதலில் போர்க்கின் பங்கு மகத்தானது.

இந்த மாங்குளம் முகாமை தகர்க்க திட்டமிட்டபோது போர்க் சில விடயங்களை என்னிடம் கூறினார். மாங்குளத்தை முற்றாக தகர்க்க வேண்டும். அதற்காக வெடி பொருள்களுடன் நானே உட்புகுவேன் என்றார். மாங்குளம் தாக்குதலுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு தயாரான நிலையில் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடிய போது கரும்புலித் தாக்குதலும் இதில் நடத்தப்பட வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டேன். அப்போது தானாக முன்வந்த போர்க் தானே வெடிபொருள்களுடன் முகாமினுள் பிரவேசிக்கிறேன் என்றார். தன்னிடம் அப் பொறுப்பை ஒப்படைக்கும்படியும் தான் அதனைச் செவ்வனே நிறைவேற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இந்த முகாமின் பகுதிகள் எனக்குத் தெரியும், எனவே நான் இப்பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என வாதிட்டார் எனவும் தெரிவித்தார்.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.